DEPOSITION OF WITNESS

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

**MCOP No.18/2021**

மனுதாரர் தரப்பு 3 வது சாட்சி வாக்குமூலம்

| | |
|---|---|
| Name | மருத்துவர் மாரிமுத்து |
| Father's Name | த/பெ. சுப்பிரமணியன் |
| Village | |
| Taluk | |
| Religion | |
| Age | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.01.2025

**மனுதாரர் தரப்பு முதல் விசாரணை:—**

**1.** நான் தற்போது தூத்துக்குடியில் உள்ள லெட்சுமி பாலி கிளினிக்கில் மூத்த மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் நீதிமன்றத்தில் இருந்து வரப்பெற்ற அழைப்பாணையின்பேரில் அதில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க ஆஜராகியுள்ளேன்.

2. நான் மேற்படி மருத்துவமனையில் பணிபுரிந்து வந்த அதே காலகட்டத்தில் சக்திவேல் மகன் தனபால் என்ற 60 வயதான ஆண் நபர் 17.12.2019 அன்று இரவு 07.30 மணிக்கு சிகிச்சைக்கு கொண்டு வரப்பட்டார். அவர் 16.12.2019 அன்று ஏற்பட்ட விபத்து காரணமாக முதலில் தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும், பின்னர் திரவியம் மருத்துவமனையிலும், அதன்பின்னர் SRRA மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டு, பின் மேல்சிகிச்சைக்காக எங்களது மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டார். அவரை பரிசோதித்து பார்த்தபோது அவரது வலது காலில் வெளி காயங்களுடன் கூடிய இரண்டு எலும்பு முறிவுகளும், வலது பாதத்தின்

வெளிக் காயங்களுடன்கூடிய ஐந்து வெவ்வேறு எலும்பு முறிவுகளும் இருப்பது தெரியவந்தது.

3.மேலும் அவருடைய நெஞ்சக பகுதியில் ஐந்து இடங்களில் எலும்பு முறிவுகளும், நுரையீரல் பாதிப்பும் இருக்கும் விபரம் தெரிய வந்தது. அவருக்கு அன்றைய தினமே முதற்கட்ட அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அதன்பின்னர் 26.12.2019 அன்று இரண்டாம் கட்ட அறுவை சிகிச்சையும், 01.01.2020 அன்று மூன்றாம் கட்ட அறுவை சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூரிய காயங்களில் இருந்து குணமானபின்னர் 15.01.2020 அன்று மதியம் 02.00 மணிக்கு எங்கள் மருத்துவமனையில் இருந்து Discharge செய்யப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்ற கருத்துரையுடன் கூடிய நான் வழங்கிய 08.02.2022 அன்று காயச்சான்று வழங்கியுள்ளேன். அந்த காயச்சான்றிதழ் Duplicate தற்போது கொண்டு வந்துள்ளேன். அதை தாக்கல்செய்கிறேன். அது **சா.சா.ஆ.1** ஆகும். மேலும் தனபால் என்ற நபர் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றது சம்பந்தமான முழு விபரங்களுடன் கூடிய அவரது Case sheet நகல் தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.2** ஆகும். (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது)

4. மேற்படி தனபால் என்ற நபர் எங்கள் மருத்துவமனையில் 17.12.2019 முதல் 15.01.2020 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கு எங்கள் மருத்துவமனையால் பில் எண். 2835 ரூ. 54,000 க்குரியது ஏற்கனவே சிகிச்சை பெற்ற நபரிடம் வழங்கியுள்ளோம். அதன் Duplicate நகல் தற்போது கொண்டு வந்துள்ளேன். அதை தாக்கல்செய்கிறேன். அது **சா.சா.ஆ.3. ஆகும்.** மேலும் சிகிச்சை பெற்ற நபர் மூன்று முறை அறுவை சிகிச்சை பெற்றதற்கான அறுவை சிகிச்சை மருத்துவர் கட்டணம், மயக்க மருந்து மருத்துவர் கட்டணம், மருத்துவ செவிலியர் கட்டணம், அறுவை சிகிச்சையின்போது மேற்படி நபருக்கு வைக்கப்பட்ட implants மற்றும் ICU கட்டணங்களும் செலுத்தப்பட்டுள்ளது.அவற்றிற்கான இரசீதுகள் தொகை செலுத்தும்போது

வழங்கியுள்ளோம். அவற்றின் நகல்கள் மருத்துவமனையில் தற்போது இல்லாத காரணத்தினால் என்னால் தாக்கல் செய்ய இயலவில்லை.

5. நெஞ்சு பகுதியில் எலும்புகள் முறிவு ஏற்பட்ட காரணத்தினால் நுரையீரல் பாதிப்பு மேற்படி சிகிச்சை பெற்ற நபருக்கு ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக பிற்காலத்தில் பாதிப்புகள் ஏற்படுவதற்கும் வாய்ப்புண்டு.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–**

1. மேற்படி எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நபர் Discharge செய்யப்பட்ட பின்னர் 2 ஆண்டுகள் கழித்துதான் இறந்துள்ளார் என்றால் அதுகுறித்து குறிப்பாக தெரியாது. மேற்படி நபர் எங்கள் மருத்துவமனையில் Discharge செய்யப்பட்ட பின்னர் 2 ஆண்டுகள் கழித்துதான் காயச்சான்று வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலதாமதமாகத்தான் காவல்துறையினர் தரப்பில் காயச்சான்று கோரப்பட்டது. அதனால் தாமதமாக வழங்கினோம், மேற்படி காயச்சான்றை மேற்படி நபரை பரிசோதித்து வழங்கினேனா அல்லது சிகிச்சை சம்பந்தமான ஆவணங்களை பார்வையிட்டு வழங்கினேனா என்றால் பரிசோதித்துதான் வழங்கினேன்.

2. காயச்சான்றிதழில் இரண்டு எலும்பு முறிவு காயங்களை குறிப்பிட்டுதான் கொடுங்காயம் என்று சான்று வழங்கியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நபருக்கு நுரையீரலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் Discharge summary ல் குறிப்பிட்டுள்ளேன். அந்த Discharge summary நகல் கொண்டு வந்துள்ளேன். அதை தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.4** ஆகும்.

3. நுரையீரல் பாதிப்பு குறித்து என்ன வகை சிகிச்சை வழங்கப்பட்டது என்றால் அறுவை சிகிச்சை எதுவும் செய்யப்படவில்லை,. மருந்து மாத்திரைகள்தான் கொடுக்கப்பட்டது. மேற்படி நபர் Discharge in Good condition என்றுதான் குறிப்பிட்டு Discharge summary வழங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

எங்கள் மருத்துவமனையில் Discharge செய்யப்பட்டபின்னர் 18.10.2022 அதாவது அவர் இறக்கும் காலம்வரை மீண்டும் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை எதுவும் பெறுவதற்கு அவர் வரவில்லை என்றால் சரிதான்.

4. மேற்படி நபருக்கு Ultra sound scan எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எலும்பு முறிவுகள் தவிர வேறு உள்காயங்கள் எதுவும் இல்லை என்றால், வயிற்றுப்பகுதியில் Ultra sound scanல் வேறு உள்காயங்கள் இருந்ததாக தெரியவில்லை. மேற்படி எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற மேற்படி நபருக்கு விபத்தில் ஏற்பட்ட காயங்களின் காரணமாக 2 ஆண்டுகள் கழித்து அவருக்கு இறப்பு ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்பு கிடையாது. காயம் அடைந்துசிகிச்சை பெற்ற நபர் ஒரு முதியவர், மூத்த குடிமகன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :–** இல்லை.

ஒம்/–P.V.வஷீத்குமார்,<br>
**தலைமை நீதித்துறை நடுவர்,**<br>
**தூத்துக்குடி.**